முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 578**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**29.04.2021**, வியாழக்கிழமை

1. கலியுகத்தின் இன்னல் போக்கிடவே
கருணை கொண்டு எந்தன் சக்தியாக
அழியாமை பெற்றுவந்த அரங்கனே
ஆறுமுகஞானியே உந்தனுக்கு ஞானஅறிவுரைஆசி
2. ஆசிதனை சுப்ரமணியர் யானும் அருளுவேன்
அறமெனும் வேலிகொண்ட அரங்கன்
தரமிக்க தொண்டர் படைகள் மூலமே
தரணியே மாற்றம் பெறக்கூடும்
3. கூடாத ஆக்கினை மாந்தர்களெல்லாம்
குருவழி அவசியம் வரவில்லை எனில்
ஈடேற்றமில்லா பேரிடர் வழி
இடர்கண்டு வாழ்வில் தொலையநேரும்
4. நேர்மைபட அரங்கன் தர்மத்தில்
நிதிஉதவி உயர் தொண்டு செய்து
வறுமைபோக்கும் மகா வரம் தன்னை
வல்லமைபட அரங்கன் வழி பெற்று உயர
5. உயரவே உலகில் பாதுகாப்பு
உலகோர்க்கு இடரில்லா பெருவாழ்வு
வாழ்வினில் சகல வளம் கூடி வல்லமைபட வாழும்காலமே
முருகப்பெருமான் எனை காணும் சக்திகிட்டி முழுமைஞானமும் அடைந்து சிறந்திடுவர்
6. சிறப்புதரும் அரங்கன் வழிகாட்டல்
சித்தி தரும் உலகோர்க்கு ஞான யோகமாக
மறுப்பின்றி அரங்கன் வழி தொடர
மண்ணுலகம் ஞான யுகமாகும்
7. யுகமாக்கும் மகா சக்தியாய்
உயர் தர்மம் பெருக்கி வரும் அரங்கன்
ஜெகத்தில் அரங்கன் கொள்கை பரவ
சித்திகள் கூடி இந்த உலகமே ஞானயுகமாகும்
8. ஆகவே அரங்கன் வழி தேடி
அகிலத்தாரே தொடர்ந்து வருகவருக
யுகமெல்லாம் பெருமாற்றம் கண்டு
உண்மைஞான பூமியாக நிலையும்கூடி

9. கூடியே ஆறுமுகன் ஞான ஆட்சி
குரு அரங்கன் துணைபட நடந்தேறும்
நாடியே உலகம் மாற்றம் பெறும்
நாட்டிவந்த ஞான அறிவுரைஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.